# அக்டோபர் – 06 – சனி

## புனித புருனோ
## “உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்” லூக் 10:20

## முதல் வாசகம் : யோபு 42 : 1 – 3, 5 – 6, 12 – 17

யோபின் முன்னைய நாள்களில் இருந்ததைவிட, பின்னைய நாள்களில் ஆண்டவர் அதிகமாக ஆசிவழங்கினார். இப்பொழுது பதினாலாயிரம் ஆடுகளும், ஆறாயிரம் ஒட்டகங்களும், ஆயிரம் ஏர்மாடுகளும், ஆயிரம் பெட்டைக் கழுதைகளும் அவருக்கு இருந்தன.அவருக்கு ஏழு புதல்வர்களும் மூன்று புதல்வியரும் பிறந்தனர்.மூத்த மகளுக்கு எமிமா என்றும், இரண்டாவது மகளுக்குக் கெட்டிசியா என்றும், மூன்றாவது மகளுக்குக் கெரென் அப்பூக்கு என்றும் பெயரிட்டார்.யோபின் புதல்வியரைப் போல் அழகுவாய்ந்த நங்கையர் நாடெங்கும் இருந்ததில்லை. அவர்களின் தந்தை, அவர்களின் சகோதரர்களோடு அவர்களுக்கும் சொத்தில் உரிமை கொடுத்தார். அதன்பின் யோபு நூற்று நாற்பது ஆண்டுகள் வாழ்ந்தார் தம் பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் நான்காம் தலைமுறைவரை கண்டுகளித்தார். இவ்வாறு யோபு முதுமை அடைந்து, பல்லாண்டு வாழ்ந்து இறந்தார்.

**பதில்பாடல் :** உம் ஊழியன் மீது உமது முக ஒளி வீசச்செய்யும்.

## நற்செய்தி : லூக்கா 10 : 17 - 24

அக்காலத்தில் அனுப்பப்பட்ட எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் திரும்பிவந்து, ”ஆண்டவரே, உமது பெயரைச்சொன்னால் பேய்கள் கூட எங்களுக்கு அடிபணிகின்றன” என்றனர்.அதற்கு அவர், ”வானத்திலிருந்து சாத்தான் மின்னலைப்போல விழக்கண்டேன். பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது. ஆயினும் தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பதுபற்றி மகிழவேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்” என்றார்.அந்நேரத்தில் இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து, ”தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே, இதுவே உமது திருவுளம்” என்றார். ”என்தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத்தவிர வேறு எவரும் மகனை அறியார். தந்தை யாரென்று மகனுக்குத்தெரியும் மகன் யாருக்கு வெளிப்படுத்த விரும்புகிறாரோ அவருக்கும் தெரியும். வேறு எவரும் தந்தையை அறியார்” என்றுகூறினார். பின்பு அவர் தம் சீடர்பக்கம் திரும்பி அவர்களிடம் தனியாக, ”நீங்கள் காண்பவற்றைக் காணும் வாய்ப்புப்பெற்றோர் பேறுபெற்றோர். ஏனெனில் பல இறைவாக்கினர்களும் அரசர்களும் நீங்கள் காண்பவற்றைக் காணவிரும்பினார்கள். ஆனால், அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றுகூறினார்.

**தியானம்:** சோதனையையும், வேதனையையும் வென்று வாழ்வதே கிறிஸ்த்தவ வாழ்வு. இதற்கு நல்ல எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர் நீதிமான் யோபு. பலதரப்பட்ட ஆசீர்வாதங்களால் அவர் நிறைவான வாழ்வு வாழ்ந்தார். ஆனால் சாத்தானால் அவர் பல வழிகளில் சோதிக்கப் பட்டார். அப்போதும் அவர் கடவுளை விட்டு விலகவும் இல்லை. அவரை நிந்திக்கவும் இல்லை, அதனால் இழந்துபோன ஆசீர்வாதங்களை பல் மடங்கு பெற்றுக் கொண்டார். செதுக்கப்பட்டுவதற்கு கல் முன்வருவதால் தான் அந்தக் கல் அழகான சிற்பமாக மாறுகின்றது. உடலில் பல குத்துக்கள் விழுமே என்று கல் பயந்தால் பலரும் ரசிக்கும் சிலையாக இல்லாமல் எல்லோரும் ஏறி மிதிக்கும் கல்லாகவே இருக்க முடியும். இவ்வாறுதான் எமது வாழ்வும் இருக்கும். சோதனைகள் எம்மை புடமிடுகின்றன. அவற்றின் வழியாக நாம் இறைவனைக் காண முடியும். கண்ணீர் நம் வாழ்வில் இல்லை என்றால் நாம் கடவுளை மறந்து விடுவோம், நம்மை படைத்தவரை நமக்கு நினைவுபடுத்த கண்ணீர் தேவைப் படுகின்றது, இன்று கடவுளை நம்பாமல், தமது எண்ணப்படி வாழ்வோர் அதிகம். வயதான போது அதனை நினைத்து ஏங்குகின்றார்கள். பிள்ளைகளுக்குப் பதிலாக வளர்ப்புப் பிராணிகளை வளர்த்துவிட்டு உதவி செய்ய யாரும் இல்லையே என்று ஏங்குகின்றார்கள். அல்லது பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்காமல் விட்டு விட்டு அவர்கள் கைவிட்டு விட்டார்களே என்று புலம்புகின்றார்கள். இன்று எம் மக்களும் இந்த சீர்கெட்ட மேலைத்தேய பழக்கத்திற்கு அடிமையாகிப் போனதுதான் வேதனையான விடயம். எனவே நற்செய்தியில் பார்ப்பதுபோல் கடவுளை நம்பி வாழ்வோம். அவர் நம்மை கைவிடவே மாட்டார்.